செ.வெ.எண்:84/ஜீன் /2019 நாள்:25.06.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 404 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் வருகின்ற 28.06.2019 அன்று நடைபெறவுள்ளது.**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

-----------------------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 404 கிராம ஊராட்சிகளிலும், தொழிலாளர் தினமான 01.05.2019 அன்று நடைபெறவேண்டிய கிராம சபை கூட்டமானது பாராளுமன்றத் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால் ஒத்திவைக்கப்பட்டு தற்போது 28.06.2019 அன்று கிராம சபைக் கூட்டம் நடைபெறுவதால் பொதுமக்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :

கிராம ஊராட்சிகளின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதை கருத்திற்கொண்டு தமிழக அரசு நிர்வாகத்தில் இருந்த நடைமுறை சிக்கல்களை விலக்கி ஊராட்சி வளர்ச்சிப் பணிகளுக்காக தேவையான நிதி ஒதுக்கீடும் அரசினால் அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகிறது.

நடைபெறவுள்ள கிராமசபை கூட்டத்தில், குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், ஊராட்சிப்பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல், கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல், பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தியினை தடைசெய்தல், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம்(ஊரகம்), முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் 2019-20, முழு சுகாதாரம் தமிழகம், முன்னோடி தமிழகம், திட்ட அறிக்கை, சுகாதாரத் திட்டத்தில் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகள், கழிப்பறை கட்டி பயன்படுத்தும் பயனாளிகளுக்கு பாராட்டு தெரிவித்தல், குழுக்களுக்கு ஒத்துழைப்பு, கழிப்பறை இல்லாதோர் விபர பட்டியல், திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், பள்ளி கழிப்பறைகள் மற்றும் அங்கன்வாடி மைய கழிப்பறைகள், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், அம்மா பூங்கா மற்றும் உடற்பயிற்சி கூடம், மகளிர் திட்டம்-வட்டி மான்ய திட்டம், புது வாழ்வுத் திட்டத்தில் VPRC மற்றும் PLF செயல்பாடுகள் குறித்த அறிக்கைகள் விவாதித்தல் மற்றும் இதர பொருட்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

28.06.2019 அன்று காலை 11.00 மணிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 404 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கிராம சபைக்கூட்டத்தில் அனைத்து பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் ஊராட்சிகளில் கிராம ராஜ்யம் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**